# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 09.03.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







## மட்டக்களப்பில் சாதாரண பரீட்சை எழுதும் மாணவன் டெங்கினால் மரணம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலினால் இவ்வாண்டு மூன்றாவது மரணம் பதிவாகியுள்ளது.

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் டெங்கு நோயினால் பீடிக்கபட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் காதியார் வீதியை அண்டி வசிக்கும் பஜிர் நாதிர் எனும் மாணவனே நேற்று

02

## வடமராட்சியில் முதலாவது கொரோனா மரணம்

( எஸ். தில்லைநாதன்)

பருத்தித்துறை தும்பளை பகுதியில் தொற்றுக்குள்ளான வடமராட்சியின் பிரபல பாடசாலை ஒன்றின் ஆசிரியை

02

## நாயாற்று பாலத்திற்குள் வேக கட்டுப்பாட்டை இழந்து பாய்ந்த வாகனம்

(ச.தவசீலன்)

வெலிஓயாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற வாகனம் ஒன்று வேககட்டுப்பாட்டை மீறி

02



## அரசே பெண்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதில் உமது பங்கு என்ன?

### மட்டில் பெண்களின் கேள்வி



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயாதீன அபிவிருத்திக்கான பெண்கள் செயற்பாட்டுவலையமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்றலில் பெண்கள் உரிமைகளை வலியுறுத்தும் முகமாக மூன்று கோரிக்கைகளை முன்நிறுத்தி கவனயீர்ப்பு நிகழ்வொன்று இடம்பெற்றது.

நாட்டில் 52 சதவீதம் பெண்கள் உள்ள நிலையில் பாராளுமன்றம் போன்ற உயர் தீர்மானங்களை மேற்கொள்ளும் சபையில் பெண்கள் பிரதிதித்துவம் வெறு

02

### வீட்டு வேலைத் தொழிலாளர்கள் சங்கத்தினால்

## மகளிர் தின கவனயீர்ப்பு



(துதி)

வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம் மகளிர் தின கவனயீர்ப்புப் செயற்பாடு மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது. சங்கத்தின் தலைவி சரசகோபால் சத்தியவாணி

02

## முகாமையாளரை மாற்றக்கோரி மட்டு. இ.போ.ச.டிப்போ ஊழியர்கள் ஆர்பாட்டம்

### க.பொ.த.பரீட்சைக்கு இடையூறின்றி பஸ் சேவைகள் வழமை நிலையில்



(ரீ.எல்.ஜவ்பர்கான், ரக்ஸனா)

சாலை முகாமையாளரை இடமாற்றக்கோரி இலங்கை போக்குவரத்துச் சாலையின் மட்டக்களப்பு டிப்போ ஊழியர்கள் நேற்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற போதிலும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர

02

## பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கையாள்வதற்கு பெண்கள் அமைப்புக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்

### அரசாங்க அதிபர் கருணாகரன் வேண்டுகோள்

சமுகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கையாள்வதற்கும், அதர்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பெண்கள் அமைப்புக்களின் ஒத்துழைப்புக்கள் மிக அவசியம். இவ்வாறான பெண்கள் அமைப்புக்கள் பூரண ஒத்துளைப்பினை வழங்குவனூடாகவே அரச அதிகாரிகள்

02










## முல்லையில் மகளிர் தினம் துக்க தினம்

### கறுப்பு உடையணிந்து மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்



சண்முகம் தவசீலன்

சர்வதேச மகளிர் தினமான நேற்று (08.03.2021) முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மகளிர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்து மகளிர் எமக்கு நீதி

02

## மகளிர் தினத்தில் மருத்துவிச்சிகளுக்குக் கௌரவம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பிலிருந்து இயங்கிவரும் கதிரவன் கலைக்கழகத்தின் 45 ஆண்டு நிறைவை முன்னிட்டு 45 நிகழ்வுகளை மேற்கொள்ளும் செயற்பாட்டின், 10ஆவது நிகழ்வாக சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேசத்திலுள்ள மருத்துவிச்சிமார் கௌரவம் வீடு வீடாகச் சென்று இடம் பெற்றது.

முதற் கட்ட

02






## சம்பந்தன் ஐயா போன்ற ஆளுமையுள்ள அரசியல்வாதி இலங்கையில் மாத்திரமல்ல தெற்காசியாவிலேயே இல்லை

சம்பந்தன் ஐயா போன்ற ஆளுமையுள்ள அரசியல்வாதியொருவர் இலங்கையில் மாத்திரமல்ல தெற்காசியாவிலேயே இல்லையென தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

02



## திருமலைக்கு புதிய தலைமைத்துவம் வேண்டும்

திருகோணமலைக்கு புதிய தலைமைத்துவம் வேண்டும். தலைமைத்துவத்தை வேறு நபர்களுக்கு வழங்குவதற்கு சம்பந்தன் ஐயா விரும்புகின்றார் இல்லையென திரு

02




# திருமலை பல நோக்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உடைப்பு

(எப்.முபாரக்)

திருகோணமலை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் உள்ள மொத்த விற்பனை நிலையம் ஞாயிறு இரவு அடையாளம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பிரதான கதவு உடைக்கப்பட்டுள்ளதாக கடமையில் இருந்த பாதுகாப்பு காவலாளி பொது முகாமையாளருக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து திருகோணமலை துறைமுக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ள காணொளியை அடிப்படையாக கொண்டு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பணம் மற்றும் பொருட்கள் திருடப்பட்டமை பற்றிய தகவல்கள் இன்னும் பெறப்படவில்லை எனவும், பொருட்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் பொதுமுகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

## நாயாற்று பாலத்திற்குள் வேக கட்டுப்பாட்டை...

முல்லைத்தீவு நாயாற்றுப்பகுதியில் நேற்று விபத்திற்குள்ளாகியுள்ளது.

வெலிஓயாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற மகேந்திரா ரக் வாகனம் வேகக்கட்டுப்பட்டை மீறி முல்லைத்தீவு நாயாற்று பாலத்திற்குள் பாய்ந்துள்ளது. இச் சம்பவத்தில் குறித்த வாகனத்தில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், பிள்ளை இருவரும் காயமடைந்துள்ளார்கள். வாகன சாரதியான தந்தை எவ்வித காயங்களும் இன்றி உயிர்பிழைத்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பாதெுமக்கள், இராணுவத்தினரின் உதவியுடன் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த விபத்து அதிவேகம் காரணமாக நாயாற்று பாலத்திற்குள் பாய்ந்திருக்கலாம் என கூறியுள்ளனர். எனினும் குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மகளிர் தினத்தில் மருத்துவிச்சிகளுக்குக்...



மாக முதலைக்குடா, அரசடித்தீவு, கற்சேனை, கடுக்காமுனை, அம்பிளாந்துறை கிராமங்களிலுள்ள மருத்துவிச்சிமார் இதன் போது கௌரவம் பெற்றனர். இந்நிகழ்வில், கிண்ணியா உதவிக்கல்விப் பணிப்பாளர் செ.சத்திதாஸ், அழ.யோகராசா, தங்க யுவன் ஆகியோரின் ஆதரவில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கதிரவன் தலைவர் கதிரவன்த.இன்பராசா, செயலாளர் கவிஞர் அழகுதனு, உபதலைவர் சோலையூரான் ஆ.தனுஸ்கரன், மாவட்ட இணைப்பாளர் பாலமீன்மடு இரா.கலைவேந்தன், ஆலோசகர் அ.குலேந்திரராசா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மருத்துவிச்சிமாரைக் கௌரவித்தனர்.

## சம்பந்தன் ஐயா போன்ற ஆளுமையுள்ள அரசியல்வாதி இலங்கையில்....

திருகோணமலை மாவட்ட சிவில் சமூக அமைப்புகளுக்கும் பாராளுமன்ற

உறுப்பினருக்கும் இடையிலான சந்திப்பு திருகோணமலை அன்புவழிபுரத்தில் இடம்பெற்றது. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உணர்வாளர்கள் இணைந்து இந்த சந்திப்பினை மேற்கொண்டிருந்தனர். இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மட்டக்களப்பில் இத்தனை பிரச்சினைகள் இருக்கும் போது திருகோணமலைக்குச் சென்று இவர் கூட்டம் நடத்த வேண்டுமா? எனவும் கேட்பார்கள். அரசியல் என்றால் அப்படித்தான் கதைப்பார்கள். ஆனால் நாம் எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து மாத்திரமே செயற்ட வேண்டும். அவ்வாறிருக்கையில் கிழக்கு மாகாணத்தில் எமது மக்களின் விடயங்கள் தொடர்பில் எங்கு சென்றும் கலந்துரையாட நான் தயராக இருக்கின்றேன். அதன் முதற்கட்டமே திருகோணமலைச் சந்திப்பு.

சம்பந்தன் ஐயா போன்ற ஆளுமையுள்ள அரசியல்வாதியொருவர் இலங்கையில் மாத்திரமல்ல தெற்காசியாவிலேயே இல்லை அவரின் தலைமைத்துவத்தின் கீழ் நாம் பயணிப்பது அனைவருக்கும் பெருமை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் அரசியல் இடைவெளிகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளினால் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதுடன் அவற்றுக்கான பதில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் தமிழ் தேசிய அரசியல் போக்கினை மீளக் கட்டியெழுப்புதல், திருகோணமலையில் தமிழர்களின் இருப்பினை பாதுகாத்தல் உட்பட பல்வேறு செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் கட்சி அரசியலுக்கு அப்பால் தமிழ் தேசிய அரசியலை இணைந்து முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் மற்றும் தொடர்ந்தும் இவ்வாறான சந்திப்புகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பது தொடர்பிலும் பலதரப்பட்ட விடயங்களை ஆராய்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



நீதி வேண்டும் எனக் கோரி கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கோறளைப்பற்று தவிசாளர் ஆகியோர்களுக்கு எதிராக கோறளைப்பற்று பிரதேச சபையின் எதிர்தரப்பு உறுப்பினர்களால் நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணியின்போது பிடிக்கப்பட்டபடம்.

(ந.குகதர்சன்)

## முல்லையில் மகளிர் தினத்தை துக்கத்தினமாக அனுஸ்ரித்து ....

வேண்டும் என கோரி கறுப்பு உடையணிந்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த 2017 மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது நான்கு ஆண்டுகளை கடந்து இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

அவர்களுடைய தொடர் போராட்டத்திற்கு இன்றுவரை நீதி கிடைக்காத நிலையில் இன்று (08.03.2021) சர்வதேச மகளிர் தினத்தில் நாம் வீதிகளில் தொடர்ச்சியாக போராடி வருகிறோம் ஆனால் இந்த அரசாங்கம் அதற்கான எந்தவித பதிலையும் வழங்கவில்லை என தெரிவித்து மகளிர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்து தமது உறவுகளுக்கு என்ன நடந்தது அவர்கள் எங்கே என்கின்ற நீதியான விடயங்கள் கிடைக்கப்பெற இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என தெரிவித்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த வகையில் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இணைந்து நேற்று (08.03.2021) காலை 10 மணியளவில் முல்லைத்தீவு புனித இராஜப்பர் ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பித்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் மாவட்ட செயலகத்துக்கு அருகில் நிறைவடைந்தது.

வேண்டும் வேண்டும் நீதி வேண்டும் , இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து,மகளிர்தினம் எமக்கு துக்கத்தினம் போன்ற கோஷங்களை எழுப்பியவாறும் சர்வதேசமே நீதி உன்னிடமே தெற்கில் சுதந்திரம் வடக்கில் அடக்குமுறை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே ,சர்வதேசமே இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் மத தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வீட்டு வேலைத் தொழிலாளர்கள் சங்கத்தினால்...

தலைமையில் இந்நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சர்வதேச உழைக்கும் பெண்கள் தினம் என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் இக் கவனயீர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், வீட்டு வேலைத் தொழிலாளர்கள் இலங்கையில் மதிப்பற்ற தன்மையில் காணப்படுகின்ற நிலை மாற்றப்பட வேண்டும். இலங்கை வாழ் வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கு அரசமைப்பினூடாக ஒரு சட்டப் பாதுகாப்பு அவசியம், வீட்டு வேலைத் தொழிலாளர்கள் பாரபட்சமாகப் பார்க்கப்படும் நிலை மாற்றப்படல் வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இக் கவனயீர்ப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அவ்விடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் ஆகியோர் வீட்டு வேலைத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், அவர்களால் வழங்கப்பட்ட மகஜர்களையும் கையேற்றுக் கொண்டனர்.

பின்னர் மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்திலிருந்து பேரணியாகப் புறப்பட்டு மட்டக்களப்பு மாநகரசபையுடன் முடிவுறுத்தப்பட்டமை குறிப்பிட்டது.

## பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கையாள்வதற்கு பெண்கள்...

தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க ஏதுவாக அமையும் என அரசாங்க அதிபர் கருணாகரன் நம்பிக்கை தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ. வாசுதேவனின் ஏற்பாட்டில் பெண்கள் தொர்பான விடயங்களில் கவனஞ் செலுத்தும் பெண்கள் அமைப்புக்களின் பங்குபற்றுதலுன் நாடும் தேசமும் உலகமும் அவளே எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் பெருவிமர்சையாக நேற்று பிரதேச செயலக வளாகத்தில் கொண்டாடப்பட்டது. இதன்போது பிரதம அதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அரசாங்க அதிபர் கருணாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் செயற்பட்டுவரும் பெண்கள் அமைப்புகளான காவியா, அருவி, நியூ அரோ, சூரியா, எஸ்கோ, மகளிர் அபிவிருத்தி ஒன்றியம், உளநல மையம், மகளிர் மகா சங்கம் மற்றும் மாவட்ட மகளிர் சம்மேளனம் என்பன இணைந்து இம்மகளிர் தின கொண்டாட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது மகளிரின் துவிச்சக்கர சவாரி, பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும் விற்பனையும், விழிப்பூட்டல் ஊர்வலம் மற்றும் துண்டுப் பிரசுர விநியோகம் உட்பட அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

இதுதவிர நன்வெமு ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்திலான தையல் இயந்திரம் மற்றும் நியூ அரோ பெண்கள் அமைப்பினால் பெண்களின் பொருளாதார மேம்பாடு எனும் செயற்றிட்டத்திலான தையல் இயந்திரம் என்பன பயனாளிகளுக்கு இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர்களான கே. அருணன், திருமதி. லக்ஷன்யா பிரசாந், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. பிரணவஜோதி, உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சுதர்சன், மாவட்ட சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஜே.எப். மனோகிதராஜ், சமுர்த்தி முகாமையாளர் சத்தியசீலன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.பீ. றஸ்மினா உட்பட பெண்கள் அமைப்புக்களின் தலைவிகள், உறுப்பினர்கள், பிரதேச செயலக பெண் உத்தியோகத்தர்கள், பெண் தொழில் முயற்சியாளர்கள்என பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

## மட்டக்களப்பில் சாதாரண பரிட்சை எழுதும்...

முன்தினம் இரவு மரணத்தைத் தழுவியுள்ளார்.

மிகத் திறமைசாலியான மாணவன் என பாடசாலை நிருவாகத்தால் கணிக்கப்பட்ட இவர் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முதல் தினமே டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டு இதுவரை2120 பேர் டெங்கு காய்ச்சலுக்குள்ளாகியுள்ளனர். டெங்கு தாக்குதலுக்கு உள்ளான மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டமே முன்னிலை வகிக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை செங்கலடி ஏறாவூர் போன்ற பிரதேசங்களில் குறிப்பிட்டமரணங்கள் பதிவாகியுள்ளது.

## முகாமையாளரை மாற்றக்கோரி மட்டு. இ.போ.ச.டிப்போ ஊழியர்கள்...

சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன்கருதி பஸ் சேவைகள் வழமை போன்று இடம்பெற அனுமதித்துள்ளதாக ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

நேற்று காலை டிப்போவின் பிரதான நுழைவாயிலை மூடிய ஊழியர்கள் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து சாலை முகாமையாளர் எஸ்.கிருஸ்ணராஜிடம் கேட்டபோது -சாலையில் மொத்தம் 198 ஊழியர்கள் கடமை புரிகின்றனர்.அவர்களுள் சொற்பமானவர்களே இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்பட்ட ஊழியர்கள் எனத் தெரிவித்தார்.

ஸ்தலத்திற்கு விரைந்த மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஹெட்டியாராச்சி தலைமையிலான பொலிசார் ஆர்பாட்டக்காரார்களுடன் பேச்சு நடாத்தினர்.

## வடமராட்சியில் முதலாவது கொரோனா மரணம்...

ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருடன் தொடர்பில் இருந்த பலர் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் இனங்காணப்பட்ட 75 வயதுடைய வயோதிப மாது ஒருவர் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் உள்ள கொரோனா சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(07) அங்கிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று திங்கட்கிழமை(08) காலை அவருக்கு ஏற்பட்ட உடல் நிலை

காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிறிது நேரம் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது.

கொரோனா தொற்று ஏற்பட்டதன் காரணமாக உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்ட நிலையில் அவரின் உடலம் கோம்பையன் மயானத்தில் மின் தகனம் அனுப்பி வைக்கப்பட்டதாக சுகாதார தரப்பினர் தகவல் தெரிவித்தனர்.

## அரசே பெண்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதில் உமது...

மனே 5.3 வீதங்களே காணப்படுகின்ற நிலையில் அவை மாற்றப்பட்டு சட்டவாக்கல் சபையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்தல், தற்போது இராஜாங்க அமைச்சின் கீழுள்ள மகளிர் விவகார அமைச்சினை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சாக உருவாக்கி பெண் அமைச்சரின் ஒருவரின் கீழ் கொண்டுவருதல், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பெண்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படல் என்ற கோரிக்கைகளை முன்நிறுத்தி கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசே பெண்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதில் உமது பங்கு என்ன? மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை அரசு உறுதிப்படுத்துமா? பெண்களின் மனித உரிமைகள் எங்கே? வீட்டினை ஆளும் பெண்கள் நாட்டினை ஆளமுடியாதா? போன்ற சுலோக அட்டைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடந்து கவனயீர்ப்பு நிகழ்வுக்கு வருகை தந்திருந்த உதவி அரசாங்க அதிபரிடம் மேற்குறித்த கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டு போராட்டம் நிறைவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருமலைக்கு புதிய தலைமைத்துவம்...

மலை இளைஞர்களும், சிவில் அமைப்பு பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் திருமலையில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியணிடம் தெரிவித்துள்ளார்கள்.




SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது



கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் மகளீர் எல்லே தொடரில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது என ஏறாவூர்ப்பற்று பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி கே.சங்கீதா தெரிவித்தார்

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் மகளீருக்கான எல்லே தொடர் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவிருந்த போதிலும் அம்பாறை மாவட்ட அணி சமூகமளிக்காத நிலையில் நேரடியாக இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட அணிகள் பங்கேற்றன.

இரண்டு இன்னிங்ஸ் கொண்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற திருகோணமலை மாவட்ட அணி களத்தடுப்பினை தெரிவு செய்தது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணி 30 பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருகோணமலை அணி மூன்று ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. முதல் இன்னிங்ஸில் இரைவாசிக்கு அதிகமான ஓட்டங்கள் பெறாத காரணத்தினால் பின் தொடர் முறையில் மீண்டும் இரண்டாம் இன்னிங்ஸிலனைத் தெடர்ந்த திருகோணமலை அணி நான்கு ஓட்டங்களைப் பெற்றது. இதனடிப்பாடையில் இரண்டு ஓட்டங்கள் வெற்றி இலக்காக தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாது இன்னிங்ஸில் இரண்டு ஓட்டங்களை பெற்று மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனானது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் நூர்தீன் முஹமட் நௌபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பதக்கங்களை வழங்கி வைத்தார்

## மீனாட்சியம்மன் ஆலயத்தில் ருத்ரம் அமைப்பின் சிரமதானம்





இலங்கையிலுள்ள ஒரேயொரு மீனாட்சிஅம்மன் ஆலயமான நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிசேகப் பெருவிழாவையொட்டி காரைதீவு ருத்ரம் அமைப்பினர் நேற்று ஆலயவளாகத்தில் சிரமதானத்திலீடுபட்டபோது...

படங்கள் வி.ரி.சகாதேவராஜா




## 26 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு..

(பைஷல் இஸ்மாயில்)

வீதி அபிவிருத்தி அம்பாரை பிராந்திய பிரதம பொறியியலாளராக கடமையாற்றிய என்.ரீ.எம்.சிராஜுடீன், தனது 26 வருட அரச சேவையிலிருந்து நேற்றைய தினம் (08) ஓய்வு பெற்றுள்ளார்.



கடந்த 1995 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பொறியியலாளராக இணைந்து கொண்ட இவர் பல்வேறு சேவைகளைப் புரிந்துள்ளார்.

இவர் கடமை புரிந்த காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் திட்ட முகாமையாளராகவும், மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சுக்களிலும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்புப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிய இவரால், பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் வீதிகள், பாலங்கள் அபிவிருத்தி, நவீன மின் விளக்குகள், வீதி சமிக்ஞை விளக்குகள் உள்ளிட்ட மரநடுகை திட்டங்களும் இவரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது சிறப்பம்சமாகும்.

தனது ஓய்வு நிலையைக்கருத்திற்கொண்டு கடந்த இரண்டு வருடங்களாக அம்பாறை பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளராகக் கடமையாற்றிய நிலையிலேயே 26 வருட தனது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கொரோனா வைரஸ் தொற்றுடன் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கான இடம் கிண்ணியா மகமார் கிராமத்தில் முன்மொழியப்பட்டுள்ளது

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றுடன் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கான இடம் கிண்ணியா மகமார் கிராமத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுடன் இறப்பவர்களை அடக்கம் செய்வதற்கான அனுமதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதனை அடுத்து இவ்வாறு அடக்கம் செய்வதற்கான இடங்கள் நாடளாவிய ரீதியில் முன்மொழியப்பட்டு வரும் நிலையில் கிண்ணியாவில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மகமார் கிராம சேவகர் பிரிவின் மையவாடி ஒன்று அடக்கம் செய்வதற்கான இடமாக முன்மொழியப்பட்டுள்ளது.

குறித்த இடத்தினை ஞாயிற்றுக்கிழமை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டு அது தொடர்பிலான அறிக்கையினை வழங்கவுள்ளதாகவும் சுற்றறிக்கைக்கு அமைவாக குறித்த இடம் அமையும் போது





அடக்கம் செய்வதற்கான இடமாக இது அடையாளப்படுத்தப்படவுள்ளதாகவும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். ஹனி குறிப்பிட்டார்.

குறித்த விஜயத்தில் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அவர்களும், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களும், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் றிஸ்வி, கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் கே.எம்.நிஹார், பிராந்திய சுற்றுச் சூழல் அதிகாரிகளும் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## நான்காவது நாளாக தொடரும் உண்ணாவிரதம்: மதகுருமார் இணைவு






இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வலியுறுத்தி லண்டனில் முன்னெடுக்கப்படும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் நேற்று(8) திங்கட்கிழமை நான்காவது நாளாக தொடர்ந்தது. நேற்று மதகுருமாரும் இணைந்துகொண்டனர். போராட்டமேடையினைக்காணலாம்.

படங்கள் வி.ரி.சகாதேவராஜா

## பொத்துவில் பிரதேசம் செங்காமத்தில் சர்வதேச மகளிர் தின விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் நிகழ்வுகள்





(திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)

சர்வதேச மகளிர் தினத்திமான இன்று அம்பாரை பொத்துவில் பிரதேச செயலாளர் பிவுக்குட்பட்ட செங்காமம் கிராமத்தில் விழிப்புணர்வு பேரணி மற்றும் அரங்க நிகழ்வுகள் என்பன மிகவும் உணர்பூர்வாக இடம்பெற்று இருந்தன.

இவ் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் பொத்துவில் பிரதேச செயலக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரேகா அருள்நிதி தலைமையில் பொத்துவில் செங்காமம் கிராமத்தில் இன்று இடம்பெற்று இருந்தனர்.

இவ் சர்வதேச மகளிர் நிகழ்வுகளானது பொத்துவில் பிரதேச செயலக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு மற்றும் பொத்துவில் பிரதேச மகளிர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் செங்காமம் ரொட்டரிக் கழக கட்டடத்தில் இடம்பெற்று இருந்தன.

இதன்போது முதல் நிகழ்வாக மகளிர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு பெண்கள் அமைப்புக்கள் வீதி பேரணி ஒன்றினை முன்னெடுத்து இருந்தனர். இதனைத் தொடர்ந்து சர்வமத குருமார்கள் மற்றும் அதிதிகள் வரவேற்கப்பட்டு நிகழ்வுகள்



மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி இருந்தன.

இதனைத் தொடர்ந்து பொத்துவில் பிரதேச செயலக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரேகா அருள்நிதி பெண் விடுதலைகள் பற்றிய விசேட உரை இடம்பெற்றதுடன் தொடர்ந்து அதிதிகளான பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துரூபன் அனுரூத்த உதவிப் பிரதேச செயலாளர் வை.றாசீத் தவிசாளர் எம்.எச். ரஹீம் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் ஆகியோரும் விசேட உரைகளை ஆற்றியிருந்தன.

இதனைத் தொடர்ந்து சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பெண்கள் இளவட்டக் கல் தூக்குதல் போன்ற விசேட கலை நிகழ்ச்சிகளுடன்; சாதனைப் பெண்கள் பலர் பொன்னாடைகள் போர்த்திப் பராட்டி கௌரவிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வீட்டுத்தோட்ட முயற்சிக்கான கிணறுகளை அமைத்து தருமாறு பாட்டாளிபுரம் பிரதேச மக்கள் கோரிக்கை



(பொன்ஆனந்தம்)

மூதூர் பாட்டாளிபுரம் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வீட்டுத்தோட்ட முயற்சிக்கான கிணறுகளை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இப்பகுதியில் மக்கள் காணிகளை வைத்திருக்கின்றபோதும் நீர்வசதியின்மையால் அவற்றை பயன்படுத்தி வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யமுடியாது ள்ளது

கிணறுகளை சுயமாக அமைக்கவும் வசதியில்லாமல் உள்ளமையால் முன்னேற்றமின்றி சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர்

எனவே சில குடும்பங்களை இணைத்தேனும் கிணறுகளை ஏற்படுத்தி தந்தால் வீட்டுத்தோட்டத்தை செய்யமுடியும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார் கள்.

பாட்டாளிபுரம் இளைஞர் வளநிலயத்தில் நடந்த சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கலந்துரையாடலில் இக் கோரிக்கை விடப்பட்டது. இப்பகுதி கிராமமக்கள் நீர் வசதி இன்மையால் மாரிகாலத்தின் தொழில் முயற்சியை மட்டும் செய்கின்றனர்.

## மினி சூறாவளி - 23 தொடர் மற்றும் தனி குடியிருப்புக்கள் சேதம்





(க.கிஷாந்தன்)

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா பட்டல்கலை மேற்பிரிவு தோட்டத்தில் ஞாயிறு மாலைவீசிய மினி சூறாவளி காரணமாக அந்த தோட்டத்தில் உள்ள 23 தொடர் மற்றும் தனி குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

கடும் காற்று காரணமாக இந்த தோட்டத்தில் உள்ள 15ம் இலக்க தொடர் குடியிருப்பின் கூரை காற்றினால் அள்ளூண்டு சென்றுள்ளன. இதனால் இந்த குடியிருப்பில் 16 வீடுகளுக்கு மழையால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் கூரைத்தகரங்களும் சேதமடைந்துள்ளன.

இதே நேரம் குறித்த பகுதியில் பாரிய கருப்பன் தைலம் மரம் ஒன்று முறிந்து வீடுகளின் மேல் வீழ்ந்ததன் காரணமாக ஒரு வீட்டின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன் ஏனைய இரண்டு வீடுகளின் கூரைத்தகடுகள் சேதமடைந்துள்ளன.

இதே பகுதியில் அமைந்துள்ள மற்றுமொரு தொடர்மாடிக் குடியிருப்பில் ஒரு சில வீடுகளின் கூரை சேதமடைந்துள்ளன.

குறித்த பகுதியில் சுமார் 50 மேற்பட்ட மரங்கள் மினி சூறாவளி காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளன

மரங்கள் மின் கம்பிகள் மீது வீழ்ந்து மின் கம்பிகள் மற்றும் வயர்கள் சேதமடைந்ததனால் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளன..

சம்பவ இடத்திற்கு நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே. ரவி அவர்கள் நேற்று (08.03.2021) காலை சமூகம் தந்து பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைக்க இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடக செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்..

## திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை பஸ் தரிப்பிடத்தில் வசதிகளை ஏற்படுத்தி தருமாறு பிரயாணிகள் கோரிக்கை





(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை பஸ் தரிப்பிடத்தில் வசதிகளை ஏற்படுத்தி தருமாறு பிரயாணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை பகுதிக்குட்பட்ட புல்மோட்டை பேருந்து நிலையத்தில் கதிரைகள் இல்லாதும், உடைந்த நிலையிலும், பிரயாணிகளுக்கான குடிநீர் வசதிகள் மற்றும் மலசல கூட வசதிகளும் இல்லாது பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

வருடக்கணக்கில் மலசல கூட கதவுகள் பூட்டிய நிலையில் காணப்படுகின்றன.

திருகோணமலையிலிருந்து, யாழ்ப்பாணம் செல்லும் பேருந்துகளும் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை செல்லும் பேருந்துகளும் புல்மோட்டை தரிப்பிடத்தில் தரித்து நின்றே செல்கின்றன.

புல்மோட்டை பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகள் நீண்ட காலமாக ஏற்படுத்த படாமல் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர். எனவே பிரயாணிகளின் நலன் கருதி கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் அதிகார சபை ஏற்படுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்

## உள்ளூர் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருள்கண்காட்சியும் விற்பனையும்




(ந.குகதர்சன்)

சர்வதேச மகளிர் தினம் இன்று திங்கட்கிழமை உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன், பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர்பிரிவில் உள்ளூர் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருள் கண்காட்சியும் விற்பனையும் மற்றும் சர்வதேச மகளிர் தினமும் நாடும் தேசமும் உலகமும் அவளே என்னும் தொனிப் பொருளில் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் வி.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், கணக்காளர் எம்.சஜ்ஜாத், நிருவாக உத்தியோகத்தர்கள் எஸ்.அப்துல் ஹமீட், சமுர்த்தி தலைமைய முகாமையாளர் எம்.அஸ¯ஸ், செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சமுர்த்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கைப்பணி மூலம் செய்யப்பட்ட அலங்கார பொருட்கள், பன் உற்பத்தி பொருட்கள், பலசரக்கு பொருட்கள், பாரம்பரிய உணவு முறைகள், உணவுப் பண்டங்கள் என்பன கண்காட்சி மற்றும் விற்பனை செய்யப்பட்டது.

குறித்த கைப்பணி கண்காட்சியை கலந்து கொண்டர்கள் பார்வையிட்டதுடன், பொருட்களை கொள்வனவு செய்து கொண்டதுடன், மகளிர் தின நிகழ்வில் மகளிர் அமைப்பு பிரதிநிதிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

நாட்டின் ஜனாதிபதியின் எண்ணக்கருவில் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தி பொருள் கண்காட்சி மற்றும் விற்பனை வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இவை செயலகத்திற்குட்ட பல்வேறு இடங்களிலும் ஏற்பாடு செய்யப்படும் என்று பிரதேச செயலாளர் வி.தவராஜா தெரிவித்தார்.

## தொற்றா நோய்க் கட்டுப்பாடும், உள்ளூர் உணவுப் பயன்பாட்டை மேம்படுத்தல்





(ந.குகதர்சன்)

ஜனாதிபதியின் எண்ணக்கருவின் செளபாக்கியா வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சமுர்த்தி திணைக்களத்தினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் மாவட்டத்திற்கான நிகழ்ச்சித் திட்டம் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக சமுர்த்தி சமுக அபிவிருத்திப் பிரிவினால் தொற்றா நோய்க் கட்டுப்பாடும், உள்ளூர் உணவுப் பயன்பாட்டை மேம்படுத்தலும் எனும் தலைப்பிலான விழிப்புட்டல் நிகழ்வு செயலக கேட்போர் கூடத்தில் இன்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ரமீசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளர்களாக கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரி.நஜீப்கான், சமுகநல வைத்திய அதிகாரி எம்.எம்.எம்.நிம்சாத் ஆகியோர் கலந்து கொண்டு தொற்றா நோய்க் கட்டுப்பாடும், உள்ளூர் உணவுப் பயன்பாட்டை மேம்படுத்தல் தொடர்பில் கருத்துக்களை வழங்கினர்.

குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி கணக்காளர் எஸ்.எம்.பஷீர், செயலக தலைமை முகாமையாளர் எஸ்.பி.எம்.ருமைஷ், வங்கி முகாமையாளர் எஸ்.ரவிச்சந்திரன், கருத்திட்ட முகாமையாளர் ஏ.எல்.சரீப், சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.ஐயுப்கான் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மைச் சமூகம் தமிழர்களாக வாழமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது

( சஞ்சயன் )




பன்னெடுங்காலமாக பேரின அரசாங்கத்தினால் தமிழ்மக்கள் அடக்கு முறைக்கு உள்ளாகிக்கொண்டுதான் இருக்கிறோம் என, கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றித் தலைவர் கணேச லோகநாதன் தெரிவித்தார்.

இன அழிப்புக்கு நீதி கோரி மண்டியிடும் அம்பிகையின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொருட்டு பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய முன்றலில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தமிழ் உறவுகளின் நிலங்கள் சூறையாடப்பட்டு உரிமைகள் மறுக்கப்படுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக சிறுபான்மைச் சமூகம் மனிதர்களாக வாழமுடியாத சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், சர்வதேசமும் பாரமுகமாகவே செயற்படுகிறது.

தமிழர்கள்சொந்த இடங்களிலேயே வாடகைக்கு இருப்பது போன்று ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். எங்களது தேவைகளை நாங்கள் பெற வேண்டுமாக இருந்தால் ஆத்மார்த்தமாக அஹிம்சா வழியிலேயே பெற முயற்சித்துக்கொண்டிருக்கின்றோம்.

தமிழ்மக்கள் எல்லோரும் அஹிம்சை முறையில் தர்ம வழி நின்று எங்கள் இலட்சியம், சுய கௌரவம், சுதந்திரம் என்பவற்றோடு வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டிய தேவை ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

லண்டன் மாநகரிலே உரிமை சார்ந்த அனைத்து விடயங்களையும் வலியுறுத்தி சாகும் வரையிலான உணவித் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அம்பிகையின் போராட்டத்திற்கு உலகெங்கும் உள்ள தமிழர்கள், தமிழ் உணர்வாளர்கள் ஆதரவு தெரிவித்த நிலையிலுள்ளர். ஆகவே அதனை வலியுறுத்தி ஈழத்தின் பல பாகங்களிலும் உள்ள தமிழர்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வீரம், மறம், அறம் என அனைத்தும் அழிக்கப்பட்டு தமிழ்மக்கள் நிர்க்கதியான நிலையிலேயே இன்று இருக்கிறார்கள். நாங்கள் மீண்டும் ஒருமித்து ஒரு குடையின் கீழ் எங்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே பொத்துவில் - பொலிகண்டி வரையான பேரணியை மேற்கொண்டிருந்தோம்.

அதற்கும் இன்னும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. நாங்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்துக்கொண்டிருந்தாலும் கோட்டாபய அரசு செவிசாய்ப்பதாகவும், சர்வதேசம் அழுத்தம் கொடுப்பதாகவும் தெரியவில்லை என்றார்.

## அதிபர் சேவை தரம் 3க்கு ஆட்சேர்ப்பு!

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கு நேர்முகத் தேர்வை நடாத்தி பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து நியமனங்களை வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது இலங்கை அதிபர் சேவை 1 2 மற்றும்3 தரங்களில் 4600 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் தற்போது நாட்டில் நிலவும் கொவிட் நிலைமையால் போட்டிப்பரீட்சை அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வை நடாத்தி முறையாக பதவி நியமனங்களை வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் எடுக்கும் என அவதானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு தற்போது நீண்டகாலமாக அதிபர் பதவியில் பதில் கடமைகளை மேற்கொள்ளும் ஆசிரியர் சேவையில் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களுக்கும் சேவையாப்பிற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் சேவையிலுள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் வாய்ப்புக்களை வழங்கி இச்சந்தர்ப்பத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்குப் பதிலாக ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வை நடாத்தி பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வதற்காவும் இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கான நியமனங்களை வழங்குவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 18 நாடுகளின் பெண்கள் சூம் வழியாக பங்கேற்ற மகளிர் தினவிழா

(வி.ரி.சகாதேவராஜா)

ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம் பெற்ற அலையன்ஸ் கிரியேட்டிவ் கம்யூனிட்டிவ் புரஜெக்ட் மற்றும் கல்லிடைக்குறிச்சி தேசிய கல்வி அறக்கட்டளை இணைந்து சூம் வழியாக நடத்திய சர்வதேச பெண்கள் மாநாடு, மார்ச் 6-ம் திகதி கனடிய நேரம் காலை 8- மணிக்கு ஆரம்பமாகி 11- மணிக்கு நிறைவடைந்தது.

மிகவும் நேர்த்தியான முறையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், பதினெட்டு நாடுகளை சேர்ந்த, பல் துறை சார்ந்த பெண்கள் கலந்து சிறப்பித்தனர். இந்த நவீன காலத்தில் பெண்களை அரசியல் மற்றும் தலைமைத்துவத்தில் ஈடுபட ஊக்குவித்தல் என்னும் பொருள்படும் தலைப்பில் இன்றைய 21-ம் நூற்றாண்டிலும் பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.







குழு விவாதத்தில், குறிப்பாக யுத்தம் காரணமாக சிரியா, காஷ்மீர், இலங்கை மற்றும் மியன்மார் போன்ற நாடுகளில் இலட்சக்கணக்கான பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளதுடன் அவர்களே பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

அத்துடன் இன்னும் பல நாடுகளில் அடிப்படை கல்வி உரிமை கூட பெண்களுக்கு மறுக்கப்படுகின்றதுடன், பல சித்திரவதைகளுக்கு ஆளாகின்ற நிலைமை தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டது.

சர்வதேச ரீதியாக பெண்கள் ஒன்றிணைந்து பலமான அமைப்பாக பெண்களுக்கான உரிமை தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் உலகளவில் பிரச்சாரம் ஒன்றை மேற்கொள்ளுவது காலத்தின் தேவையாக இருக்கின்றது என கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

அதேவேளை பெண்கள் பொதுத்துறையில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது எனினும் அவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்தே முன்னுக்கு வர வேண்டியிருக்கின்றது.

அவர்கள் மனரீதியான தாக்கங்கள் மற்றும் வெளியில் எதிர்நோக்கும் அவலங்களை மிக உறுதியுடன் கடந்து வரும் பட்சத்தில் பல முன்னேற்றங்களை காண்பதுடன், மற்ற பெண்களையும் வழிநடத்த முடிவதுடன் தொடர்ந்து பல கருத்தரங்குகள் நடத்துவதன் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தி , பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் விதவை பெண்கள் வாழ்வில் மாற்றம் ஏற்பட உலகளாவிய ரீதியில் பெண்கள் பாடுபட வேண்டும் என்ற ஆலோசனையுடன் சர்வதேச பெண்கள் மாநாடு நிறைவடைந்தது.

# தேசிய மீலாதை முன்னிட்டு நுவரெலியாவில் 100 வறுமையான குடும்பங்களுக்கு வீடுகள்

## - பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேசிய மீலாத் விழாவினை முன்னிட்டு நுவரெலியாவில் வறுமையான 100 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். அத்தோடு அங்கு மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி இணைப்புக்குழு தலைவரும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் 24 மாவட்டங்களில் தேசிய மீலாத் விழாக்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை தேசிய மீலாத் விழா இடம் பெறவில்லை. இதன் காரணமாக இவ் வருடத்துக்கான (2021) தேசிய மீலாத் விழாவினை நுவரெலியா மாவட்டத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதமரும் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ விடுத்த தீர்மானத்திற்கமைய, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் நடாத்துவதற்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

மேற்படி நிகழ்வின் ஆரம்ப கூட்டம் நுவரெலிய மாவட்ட செயலகத்தில் மார்ச் மாதம் 04 ஆம் திகதி நுவரெலிய மாவட்ட மேலதிக செயலாளர் சரத் ஜன்தர ஏற்பாட்டில் நுவரெலிய மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழு தலைவரும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸ ாநாயக்கவின் தலைமையிலும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம் அஷ்ரபின் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் தேசிய மீலாத் விழா (2021) இவ்வருடம் நுவரெலியா மாவட்டத்தில் நடாத்த வேண்டும் என்ற ஜனாதிபதியினதும் பிரதமரினதும் வேண்டுக்கோளுக்கமைய நுவரெலியா மாவட்டத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

இதன்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் கோலாகலமாக தேசிய மீலாத் விழா நடாத்தப்படும்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்றார்.




மட்டக்களப்பிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் சுபீட்சம் பத்திரிகையின் இரண்டாவது இதழ் தற்போது பல ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது. இந்நிலையில் மக்கள் பத்திரிகையை ஆர்வத்துடன் வாங்கிப் படிப்பதை அவதானிக்க முடிகின்றது.

(ரக்ஸனா)

# கண்டியில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வு



(இக்பால் அலி)

கண்டி பொலிஸ் மகளிர் பிரிவும் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவகம் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு கண்டி பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் மத்திய மாகாண பொலிஸ் மகளிர் அணித் தலைவியும் உதவிப் பொலிஸ் அதிகாரியுமான ஜானகி குமாரி செனவிரட்ன தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்திட்சகர் சி. ஏ. ரட்நாயக மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் பெ முத்துலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதில் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள், பெண் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

விசேடமாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகளும் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள், கண்டியிலுள்ள தெற்கு மற்றும் வடக்கு இலங்கை போக்குவரத்து சபை முகாமையாளர்களக்கு பெண்கள் தொடர்பிலான விழிப்புணர்வு ஸ்டிகல், பெனர்கள் முதலியவை வழங்கி வைக்கப்பட்டன.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் எற்பாட்டில் அமைதி முறையிலான கவனயீர்ப்புப் போராட்டம்




சர்வதேச மகளிர் தினத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் எற்பாட்டில் அமைதி முறையிலான கவனயீர்ப்புப் போராட்டமொன்று இன்றைய தினம் மாமாங்கம் ஆலயம் முன்பாக சர்வதேச நீதி கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறும் இடத்தில் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவி அ.அமலநாயகி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கவனயீர்ப்பு நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகள் பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச மகளிர் தினத்தில் தங்கள் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது? தங்கள் உறவுகள் எங்கே? போன்ற பல்வேறு கேள்விகளுடன் போராடிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு சர்வதேசத்தினூடாக ஒரு நீதி வேண்டும் என்ற அடிப்படையில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்த நிலையில், முற்று முழுதாக சர்வதேசத்தை நாடி நிற்கின்ற மக்களை சர்வதேசம் ஏமாற்றாமல் உரிய நீதியைப் பெற்றுத் தர வேண்டும், லண்டனில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அம்பிகை அம்மணியின் கோரிக்கைகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் உரிய கவனமெடுத்துச் செயற்பட வேண்டும். போன்ற கோரிக்கைளையும் இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் முன்வைத்தது.

இதேவேளை போராட்ட இடத்திற்கு வருகை தந்த மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகளால் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தெரியப்படுத்தி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையினை பாரப்படுத்த முற்பட்ட வேளை பொலிஸாரால் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் உரிய இடத்தில் இல்லாமையால் அவ்விடம் விட்டுச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளராக றிஸ்கான் நியமனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளராக கே.ஆர். றிஸ்கான் முகம்மட், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனம் திங்கட்கிழமை (08) கட்சி தலைமையகத்தில் வைத்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய இளைஞர் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மயந்த திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்நியமனத்தின் மூலம் எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு பல்வேறு நலன் சார்ந்த திட்டங்கள் முன்னெடுப்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் றிஸ்கான் முகம்மட் கலந்துரையாடினார்.

அத்துடன் இவர் முன்னாள் அமைச்சர் மனோ கணேசனின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக கடமையாற்றிய காலத்தில் இளைஞர்களுக்கு பல்வேறு நலன்சார் திட்டங்களை முன்னெடுத்து உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

# "சாய்ந்தமருது பிரதேச செயலாளராக எம்.எம் ஆஸீக் பதவியேற்பு"

(சர்ஜுன் லாபீர்)

சாய்ந்தமருது பிரதேச செயலாளராக நற்பிட்டிமுனைச் சேர்ந்த எம்.எம் ஆஸீக் நேற்று தனது கடமைகளை சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றிய இன்று முதல் சாய்ந்தமருது பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்று கடமையாற்றுகின்றார். என்பதோடு இவருக்கான நியமனம் அரச சேவைகள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டது.

இப்பதவியேற்பு நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா,நிந்தவூர்



பிரதேச செயலாளர் டி.எம்.எம். அன்சார்,அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். சாபீர்,உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் கணக்காளர்கள் காரியாலய உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர்.

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த எம்.எம்.ஆஸீக் சம்மாந்துறை,உஹன ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றிய இவர் பதவி உயர்வு பெற்று சாய்ந்தமருது பிரதேச செயலாளராக கடமையேற்கவுள்ளார். என்பதோடு இவரது துணைவியார் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து நிந்தவூர் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றுகின்றார். அத்தோடு இவர் முன்னாள் கல்முனை பிரதேச செயலாளர் மர்ஹூம் ஏ.எல்.எம் பழீலின் மருமகனும் ஆவார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கல்முனை பிரதேச செயலக சர்வதேச மகளிர் தின நிகழ்வு



(றாசிக் நபாயிஸ்)

கல்முனை பிரதேச செயலக சர்வதேச மகளிர் தின நிகழ்வு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல்.பாத்திமா சிபாயாவின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் கல்முனை பிரதேச நல்லிணக்க மன்றத்தின் அனுசரணையில் நேற்று இடம் பெற்றது.

110வது சர்வதேச மகளிர் தினம் இலங்கையின் சகல பிரதேசங்களிலும் கொண்டாடப்பட்டதுடன்

இலங்கை மகளிர்களை வலுப்படுத்தவும், அவர்களின் உரிமைகளை உரிய முறையில் பெற்றுக் கொடுக்கவும்

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் ஒவ்வொரு வருடமும் இவர்களுக்கென பல்வேறு விதமான செயற்றிட்டங்களும், ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களும், கருத்தாடல்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ்வமைச்சினால் மார்ச் 08ஆம் திகதி கொண்டாடப்படும் மகளிர் தினத்தை முன்னிட்டு வருடந்தோரும் பொருத்தமான வாசகம் முன்மொழியப்பட்டு அவை தேசிய ரீதியாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்த வகையில் இவ்வருடத்துக்கான வாசகமாக "நாடும் தேசமும் உலகமும் அவளே" என்ற வாசகம் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்சான், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலீஹ், மேலதிக மாவட்ட பதிவாளர் எம். ரி.எம்.கலீல், கிராம நிர்வாக சேவை உத்தியோகத்தர் யூ.எல். பதிறுத்தீன், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி ஜனுபா, கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.முகர்றப் பிரதேச ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் கே.எல்.யாஸீன் பாவா, முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.சம்றினா கனிபா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எல்.ஹஸ்பியா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ.பஜிமிலா, உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சிறுபோக நெற்செய்கைக்கு ஆயத்தம்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் 2021ம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கான விதைப்புப் பணிகளை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டுமென அம்பாறை மாவட்டச் செயலாளர் டி.எம்.எல். பண்டாரநாயக்க தெரிவித்தார்.

"இம்முறை அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா நீர்ப்பாசனப்பிரிவில் 01 இலட்சத்தி 20 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதோடு அக்கரைப்பற்று வதிவிடதிட்ட முகாமையாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 24 ஆயிரத்தி 10 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

"சேனநாயக்க சமுத்திரத்தில் 04 இலட்சத்து 16 ஆயிரத்து 800 ஏக்கர் அடி நீர் காணப்படுகின்றது. இதன்படி சிறுபோகத்துக்கான விதைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

"நீரை வீண் விரையம் செய்யாது தேவைக்கேற்றவாறு பயன்படுத்தி எதிர்வரும் போகங்களில் நெற்செய்கை பண்ணுவதற்குரிய செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். இது விவசாயிகளின் கையில் தங்கியுள்ளது.

"தீர்மாணிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் விதைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டாமெனவும் இங்கு நிறைவேற்றப்படும் தீர்மாணங்களை சகலரும் பின்பற்ற வேண்டும். இதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் நாட்டின் தேசிய உற்பத்திக்கு பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றார்கள். 16 மாவட்டங்களில் நெல் உற்பத்தி செய்கை பண்ணப்படுகின்ற போதிலும் அம்பாறை மாவட்டம் 25 வீதமான நெல் உற்பத்தியை ஈட்டி தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# தைபா அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவிகள் அனுமதி

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவிகளை சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்முறை ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சை எழுதிய அல்-குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்த மாணவிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமையும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை சாய்ந்தமருது பொலிவேரியன் நகரில் அமைந்துள்ள கல்லூரியின் நிர்வாக காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள மாணவிகள் விண்ணப்பப் படிவங்களை கல்லூரியின் நிர்வாக காரியாலயத்தில் பெற்று, உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க முடியும் என கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

இக்கல்லூரியில் மௌலவியா பட்டத்திற்கான இஸ்லாமிய மார்க்கக் கல்வி போதிக்கப்படுவதுடன் சி.ஈ. உயர் தரப் பரீட்சைக்கும் மாணவிகள் தயார்படுத்தப்படுகின்றனர். இங்கு கல்வி பயிலும் மாணவிகள் மூன்றாம் வருடத்தில் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதுடன் நான்காம் வருடத்தில் அல்ஆலிம் பரீட்சைக்கு தோற்றி மௌலவியாக்களாக பட்டம் பெற்று வெளியேறுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் இக்கல்லூரியில் இருந்து ஜீ.சி.ஈ. உயர் தரப் பரீட்சைக்கு தோற்றிய பெரும்பாலான மாணவிகள் எல்லா பாடங்களிலும் சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதி பெற்று, உயர்கல்வி கற்று வருகின்றனர். அத்துடன் அரசாங்க பரீட்சைத் திணைக்களத்தின் அல்ஆலிம் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவிகளும் சித்தியடைந்திருப்பதுடன் இதுவரை 18 மாணவிகள் மௌலவியா பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கிழக்கில் கோட்டக்கல்வி அதிகாரிகள் வெற்றிடங்களை நிரப்புக: கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாணத்தில் நிலவும் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் செயலாளர் ஏ.ஏல். முகம்மட் முக்தார் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கிழக்கு மாகாணத்தில் கல்முனை, கிண்ணியா, மட்டக்களப்பு மத்தி, மூதூர் மற்றும் திருமலை ஆகிய கல்வி வலயங்களில் மிக நீண்ட காலமாக கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாது காணப்படுகின்றன.

இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் கோரிய போதும் இதுவரை நேர்முக பரீட்சை நடாத்தப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருகிறது.

கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, நாவிதன்வெளி, கிண்ணியா, குறிஞ்சாக்கேணி, முள்ளிப்பொத்தானை, ஓட்டமாவடி, தோப்பூர், குச்சவெளி ஆகிய கோட்டங்களுக்கே இவ்வாறு நீண்ட காலமாக கோட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய கோட்டக் கல்வி அதிகாரி பதவி இலங்கை கல்வி நிருவாக சேவையின் பொது ஆளணிக்குரிய பதவியாகும். கிழக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதால் இலங்கை அதிபர் சேவை முதலாம் தர சிரேஸ்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் கல்வி கோட்டமொன்றில் ஒரு சாதாரண ஆசிரியர் கோட்டக் கல்வி அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டு அதிபர், ஆசிரியர்களை மேற்பார்வை செய்துவரும் அவலமும் இடம்பெறுகிறது.

சில கல்வி வலயங்களில் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் பதில் கடமை அடிப்படையில் தமது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக செய்து வருகின்றனர்.

இது பல்வேறு நிருவாக பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே வெற்றிடமாக காணப்படுகின்ற கோட்டக் கல்வி அதிகாரி பதவிகளை உடனடியாக நிரப்புமாறு சங்கச் செயலாளர் முகம்மட் முக்தார் அக்கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.